**விவசாய ஆராய்ச்சி கொள்கை சபையிம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

விவசாய ஆராய்ச்சி கொள்கை சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 47 ஆம் இலக்க இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கை சபை அதிகாரச்சட்டம் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிலையத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிட்டு அமுல்படுத்தப்பட்டது. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் பிரகாரம் நிலையான சொத்துக்களுக்கான விளைதிறன் ஆயுட்காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யாததன் காரணமாக | ரூபா 11,045,012 கிரயமுள்ள நிலையான சொத்துக்களின் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் படியான விளைதிறனான ஆயுட்காலத்தை மீண்டும் | வினைதிறனான ஆயுட்காலத்தை மீளாய்விற்கு உட்படுத்தி நிதிக் கூற்றுக்களில் செம்மையாக்குதல் |

| | | |
|---|---|---|
| இரண்டு சொத்து வகுதிகளின் ரூபா 11,045,012 கிரயமான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தும் இன்னும் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தன. அதற்கிணங்க மதிப்பீடு செய்யப்பட்ட தவறை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் திருத்தியமைத்து நிதிக்கூற்றுக்ளில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வு செய்து அடுத்துவரும் கணக்காண்டின் போது உரிய சொத்துக்களுள் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | செய்யப்படுதல் வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டியவைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விவசாய ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக 3 ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் 3 பல்கலைக்கழகங்களுக்கும் வழங்கிய பணத்திலிருந்து கொள்கைச் சபைக்குத் தீர்த்து வைக்கப்பட வேண்டிய ரூபா 659,131 பணத்தை இதுவரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 2006 ஆம் ஆண்டிலிருந்து நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டு இருந்தன. | சபையினால் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 659,131 பணத்தை, அடுத்துவரும் கணக்காண்டில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | உரிய தரப்பினர் களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 7,563,922 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிரான முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 6,552,181 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 14,116,103 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டுச் செலவுகள் ரூபா 39,942,557 ஆல் குறைவடைதல் பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபை தற்பொழுது செயற்படுகின்ற கட்டிட வளவுக்கு புதிய ஒரு பகுதியைச் சேர்ப்பதற்காக 2019 ஆம் ஆண்டின் போது கட்டிடத் திணைக்களத்திற்கு ரூபா 2,460,000 முற்பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2021 மே 7 ஆந் திகதி வரையும் கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | கட்டிட வளவிற்கு புதிய பகுதியைச் சேர்த்துக் கொள்வதற்காக இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கைச் சபைக்கும் கட்டிடத் திணைக்களத்திற்கு மிடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 2,460,000 முற்பணம் 2019 ஆம் ஆண்டின் போது செலுத்தி வேலை ஆரம்பிக்கப்பட்டது. உடன்படிக்கையின் பிரகாரம் கட்டிடத் திணைக்களத்தால் நிர்மாணங்கள் மேற்கொள்ளப் பட்டிருந்தும் சபைக்கு போதியளவில் மூலதன நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்படாமையின் காரணமாக உடன்படிக்கை யின் பிரகாரம் பணத்தைச் செலுத்துவதற்கு இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபைக்கு முடியாதிருந்தது. அதன் காரணமாக கட்டிடத் திணைக்களத்தால் நிர்மாண ஒப்பந்தங்கள் வழங்கப் பட்டிருந்த நிறுவனம் சபையின் நிர்மாண நடவடிக்கைகளை தற்காலிகமாக நிறுத்தி வைத்திருந்தது. செலுத்த வேண்டிய நிலுவைப் பணமாகிய ரூபா 1,672,303 பணத்தை 2021 யூலை 06 ஆந் திகதி செலுத்தியதன் பின்னர் நிர்மாண நடவடிக்கைகளை அண்மையில் ஆரம்பிப்பதாக கட்டிடத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மாண வேலைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2019 ஆம் ஆண்டின் போது 5 பதவிகளுக்காக உத்தியோகத்தர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு பத்திரிகை அறிவித்தல், எழுத்து மூல பரீட்சை, நேர்முகப் பரீட்சை என்பவற்றிற்காக ரூபா 384,040 செலவு செய்திருந்த போதிலும் அங்கீகரித்த பதவியணியின் 9 பதவிகளுக்காக பல ஆண்டுகளாகக் காணப்பட்ட 10 வெற்றிடங்களுக்காக மீளாய்வாண்டின் போதும் உத்தியோகத்தர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டு விண்ணப்பங்களை கோரி ஆட்சேர்ப்பதற்குரிய தொடக்க செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்ற அதேவேளையில் 2020/01 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து ஆட்சேர்ப்புக்களும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டன. எனவே வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாதுள்ளது என தெரிவிக்கின்றேன். நிதி அமைச்சின் 2020/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் வெற்றிடமான பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் அதற்கிணங்க வெற்றிடமாக உள்ள கணக்காளர் பதவி மற்றும் பிரதிப் பணிப்பாளர் பதவி மற்றும் பிரதிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி முகாமைத்துவம்) பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்கள் முடிவுறுத்தப்பட்டுள்ளது. | காணப்படுகின்ற வெற்றிடங்களை விரைவாக நிரப்புதல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் சேதனப் பசளை விவசாயத்திற்காக கவனம் செலுத்தும் முக்கியத்துவம் இனங் காணப்பட்டு அத்துறையில் ஆராய்ச்சிகளை அதிகரிக்க வேண்டிய 07 முன்னுரிமைத் துறைகள் இலங்கையில் காணப்பட்ட ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு அறிமுகப் படுத்தப்பட்டிருந்தும் சேதனப் பசளை விவசாய கொள்கை மற்றும் தற்பொழுது சந்தையில் காணப்படுகின்ற | தேசிய ஆராய்ச்சி கொள்கை மற்றும் ஆராய்ச்சி முன்னுரிமைகளைத் தயாரித்தல் போன்ற செயற்பாடுகள் எங்கள் நிறுவனத்திற்குரிய செயற்பாடானதுடன் தேசிய ஆராய்ச்சி முன்னுரிமைகளைத் தயாரித்தல் எங்கள் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. அந்த முன்னுரிமையின் பிரகாரம் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் ஆராய்ச்சி | 24 ஆராய்ச்சி நிறுவனங்கள் தொடர்பாக இந்த முன்னுரிமைகள் அறிமுகப்படுத்து வதனால் அந்த நிறுவனங்கள் இந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு அக்கறை காட்டுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காபனீரொட்சைட் உணவுகளின் தரம் சம்பந்தமான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக 2017 ஆம் ஆண்டிலிருந்து ஆராய்ச்சி நிறுவனங்கள் அக்கறை காட்டியிருக்கவில்லை. | நிறுவனங்களின் மூலம் இடம்பெற்று வந்தது. எங்கள் நிறுவனத்தினால் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப் படுவதில்லை. | |
| (ஆ) | விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களிடமிருந்து கோரப்பட்ட ஆராய்ச்சிப் பிரேரணைகளிலிருந்து 02 செயற்திட்டங்களுக்காக நிதியை வழங்குவதற்கு 2019 ஆம் ஆண்டின் போது திட்டமிடப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் போதேனும் நிதி வழங்கப்பட்டிருக்காத துடன் மீளாய்வாண்டிற்காக புதிய பிரேரணைகள் இனங்காணப் பட்டிருக்கவில்லை. | புதிய செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது நிதி இருக்கவில்லை. எனவே புதிய செயற்திட்டத்திற்காக நிதி வழங்கப்படவில்லை. | புதிய செயற் திட்டங்களை ஆரம்பிப்பதற்கும் காணப்படுகின்ற செயற்திட்டங்களை உரிய காலத்தில் முடிவுறுத்து வதற்கும் செயற்திட்ட செயல் முன்னேற்றங்களை பௌதீக ரீதியாகப் பரீட்சிப்பதற்கும் பொருத்தமான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |
| (இ) | விவசாய ஆராய்ச்சி நிறுவனங்கள் மேற்கொண்ட ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை ஆராய்ச்சிக்காக நிதி ஏற்பாடுகளை வழங்குதல், ஆராய்ச்சி உத்தியோகத்தர், (Research Officer), விஞ்ஞானிகள் (Scientist) ஏனைய பதவியணியினர்கள் தொடர்பான தகவல்களும் நிறுவனத்தின் பௌதீக வளங்கள் தொடர்பான தகவல்களும் 2019 ஆம் ஆண்டு வரை சேகரிக்கப்பட்டு தரவு முறைமை நாளதுவரையாக்குதல் (Information for Agricultural Research Managers) | 2019 ஆம் ஆண்டு வரை தரவுகள் சேகரிக்கப்பட்டு தரவு முறைமையானது (Information for Agricultural Research Managers) நாளதுவரையாக்கப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டு வரையான வெளியீடுகளை மிகவும் விரைவில் அச்சிட்டு வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதற்குத் தேவையான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்வதற்கு குறித்துக் கொண்டுள்ளேன். | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் தரவு முறைமையை நாளதுவரையாக்கி வருடாந்தம் வெளியீடுகளை வழங்குதல் வேண்டும். |

செய்யப்பட்டிருந்தும் 2010 ஆம் ஆண்டின் பின்னர் அத்தகவல்களை உள்ளடக்கி வருடாந்தம் வழங்கப்பட வேண்டிய வெளியீடுகள் வழங்கப்படவில்லை.